பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 14உ (30—11—67) வியாழன் வெளியூர்: கார்த்திகை 15உ (1—12—67) வெள்ளி [இதழ்: 140

தலைமைச் செயலகம் வருவோருக்கு கடவுச் சீட்டு

வசதி அதிகரிப்பே தவிர உரிமைக் குறைப்பு அல்ல!

சென்னை, நவ. 29—

"தமிழக அரசுத் தலைமைச் செயலகத்திற்குள் கடவுச் சீட்டுகளுடன்தான் வரவேண்டும் என்று முறைப்படுத்தும் ஏற்பாட்டைச் செயல்படுத்துவதற்கான நாள் இன்னும் முடிவுசெய்யப்படவில்லை; செயலகத்திற்கு வந்து போகிறவர்களுக்கு உரிய வழிகாட்டி, அவர்கள் விரைந்து பணிகளை முடித்துக்கொண்டு செல்ல உதவியாக இருக்கும் பொருட்டே இந்த ஏற்பாடு; இதனல் பார்வையாளர்கட்கு வசதி அதிகரிக்குமே தவிர, உரிமை குறைக்கப்படமாட்டாது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

மேயராக டாக்டர் அபிபுல்லா பேக்-- துணை மேயராக பவளவண்ணன்

இரு பதவிகளுக்கும் போட்டியின்றித் தேர்வு

சென்னை, நவ. 30—

சென்னை மாநகராட்சிமன்றத்தின் 1967—68-ம் ஆண்டுக்கான மேயராக, முஸ்லிம் லீக் உறுப்பினர் டாக்டர் அபிபுல்லா பேக் ஒருமனதாக நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணை மேயராக, சென்னை 98-வது வட்ட மாநகராட்சி (தி.மு.க.) உறுப்பினர் திரு. சி. பி. பவளவண்ணன் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று மாலை 5-30 மணிக்கு, ரிப்பன் மாளிகையில் இந்தத் தேர்தல் மேயர் இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது.

மாநகராட்சி தி. மு. க. தலைவர் திரு. வி. முனுசாமி, மேயர் தேர்தலுக்கான வேட்பாளராக டாக்டர் அபிபுல்லா பேக் பெயரை முன்மொழிந்தார்; துணைத் தலைவர் திரு. சிட்டிபாபு வழிமொழிந்தார்.

வேறு எவர் பெயரும் முன்மொழியப்படவில்லை; எனவே டாக்டர் அபிபுல்லா பேக் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக, மேயர் சம்பந்தம் அறிவித்தார்.

உடன், டாக்டர் அபிபுல்லா பேக் அவர்களை ஆளுங்கட்சித் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவரும் மேயர் இருக்கைக்கு அழைத்துவந்தனர்.

பதவி விலகும் மேயர் திரு. சம்பந்தம், மேயருக்குரிய தங்கச் சங்கிலியைக் கழற்றி அவருக்கு அணிவித்து, இருக்கையில் அமரச் செய்தார்.

துணை மேயர் தேர்தல்

அடுத்து, புதிய மேயர் திரு. அபிபுல்லா பேக், துணை மேயர் தேர்தலை நடத்தினார்.

தோழர் பவளவண்ணன் பெயரை திரு. முனுசாமி முன்மொழிந்தார்; திரு. டி. கே. கபாலி வழிமொழிந்தார்; வேறு யார் பெயரும் முன்மொழியப்படாததால் தோழர் பவளவண்ணன் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேயருக்கும், துணை மேயருக்கும் கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் மாலையணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

மேயரையும் துணை மேயரையும், பாராட்டித் திருவாளர்கள் வி. முனுசாமி, காஜா மொய்தீன், சிட்டிபாபு, அரங்கநாதன், எஸ். கிருஷ்ணமூர்த்தி, சைதை சம்பந்தம், குப்புசாமி, சா. கணேசன், இரா. சடகோபன், நாகூர் மீரான், ஆர்.டி. பாஸ்கரன், சிலார் மியான், இலட்சுமிபதி, அ. செல்வராசு, எம். எஸ். இளங்கோ, வேலூர் நாராயணன், கே. வி. சாமி, ஆணையர் அம்பாசங்கர் ஆகியோர் பேசினர்.

இறுதியில் மேயரும், துணை மேயரும் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

தேர்தலுக்கு முன், ரிப்பன் மாளிகைக்கு முன்னுள்ள வெள்ளுடைவேந்தர் சர். தியாகயார் சிலைக்கு, கழக உறுப்பினர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்திவிட்டு மண்டபத்துக்குள் நுழைந்தனர்.

மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் அபிபுல்லா பேக், ஏற்கனவே துணை மேயராகவும் பதவி வகித்திருக்கிறார்; தற்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார்; பிரபல டாக்டரும் ஆவார்.

துணைமேயர் திரு. பவளவண்ணன், 98-வது வட்ட மாநகராட்சி தி. மு. கழக உறுப்பினராகத் தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்; நல்ல பேச்சாளர்; எஸ். எஸ். எல். சி.-வரை படித்த 29 வயது இளைஞர்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்துக்குக் குழாய் மூலம் குடிநீர்

வழியில் உள்ள கிராமங்களுக்கும் வழங்க ஏற்பாடு

சென்னை, நவ. 29—

"தூத்துக்குடித் துறைமுகத் திட்டப் பகுதிக்குத் தாம்பிரபரணி ஆற்றிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தின்கீழ் இக்குழாய் போடப்பட்டிருக்கும் வழியிலுள்ள கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது; இத்திட்டத்தை, ஆராயத் தலைமைப் பொறியர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்; இதற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சிமன்றங்களின் சம்மதம் எதிர்பார்க்கப்படுகிறது"

என்று பொதுப் பணித்துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி, சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

காங்கிரசு ஆட்சியில் கட்டிய சுரங்கப் பாதையில் விரிசல்!

சென்னை, நவ. 29—

"சென்னை உயர் நீதிமன்றத்துக்குப் பின்புறம் கட்டப்பட்ட சுரங்கப் பாதைச் சுவரில் விரிசல் ஏற்பட்டு, தண்ணீர் உள்ளே புகுவது தெரியுமா?"

என்று சட்டமன்றத்தில், டாக்டர் ஹண்டே கேட்ட கேள்விக்கு அமைச்சர் மு. கருணாநிதி பதிலளிக்கையில், 'இதுபற்றிக் கட்டிடப் பொறியாளருக்குத் தெரிவிக்கப்பட்டு, குறிப்பு அனுப்பும்படிக் கோரப்பட்டுள்ளது' என்றார்.

[இந்தச் சுரங்கப் பாதை முந்திய காங்கிரசு ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது என்பது நினைவு கூரத்தக்கது.]

காங்கிரசு தலைவர் தேர்தல் இறுதிக் கட்டத்தை நெருங்குகிறது!

காமராசரை மீறிச் சென்றுவிட்டது நிலைமை!

இந்திராவுடன் கருத்து வேற்றுமை தொடர்ந்து வருகிறது--- 'போட்டி தவிர்க்கப்படும்' என்பது மதில்மேல் பூனை நிலைதான்

நான்கு தடவைகள் சந்தித்துப் பேசிய பின்னரும், இந்திரா—காமராசரிடையே தலைவர் தேர்தல் பற்றி ஓர் ஒற்றுமையான முடிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை!

'வேறுபடுகிறோம்' என்பதில், அவர்கள் ஒன்றுபட்டிருக்கிறார்கள்!

இந்திரா விரும்பும் நந்தாவையோ, சஞ்சீவையாவையோ, காமராசர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை!

காமராசரின் அனுதாபத்தைப் பெற்றிருக்கும் பாட்டில், இந்திராவுக்கு ஏற்றவராக இல்லை!

இருவரும் சேர்ந்து வேறு எவரையும் தேர்ந்தெடுத்திருப்பதாகவும் தெரியவில்லை!

பரவலாகப் பேசப்படுபவரான இராஜஸ்தான் முதலமைச்சர் சுகாதியாகூட, 'முதலில் இந்திராவும்—காமராசரும் சேர்ந்து என்னை விரும்புகிறார்களா என்பது தெரியட்டும்; பின்னர் வேண்டுமானல் தலைவராக வருவதற்கு ஒப்புகிறேன்' என்றே கூறுவதாகத் தெரிகிறது!

'இந்திராவின் அமைச்சரவைக்கு ஒரு பலவீனத்தை ஏற்படுத்துவோம்' என்ற தந்திரப் போக்கில் செயல்பட்டுவரும் மொரார்ஜி—செகசீவன்ராம்—சவாண் ஆகிய மூவரில் ஒருவர், கட்சித் தலைமைக்கு வரட்டுமே என்று காமராசர் விரும்புகிறார்—என்ற புதிய செய்தியினைத் தவிர, காமராசரின் முழு நம்பிக்கையைப் பெற்ற ஒரு வேட்பாளரோ அல்லது தேர்தல் நிலைமைகளோ, அவரது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகத் தெரியவில்லை!

இதற்கிடையில், 'இளைய பரம்பரையினர்' என்றும், 'தீவிரவாதிகள்' என்றும் கூறப்படும் காங்கிரசிலுள்ள உறுப்பினர்கள் சிலர், மோகன் தாரியா என்பவரை தலைவர் தேர்தலுக்கு நிறுத்தியிருக்கின்றனர்!

தாரியாவின் வேட்பு மனு, இந்திராவின் பலத்தைத்தான் பங்குபோடும் என்பதால் காமராசர், போட்டியைத் தவிர்ப்பதற்கு எந்த வித முயற்சியும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது!

மேற்கு வங்கத்தில்

குடியரசுத் தலைவர் ஆட்சி-- இடைத் தேர்தல்?

கிளை விட்டுத் துளிர்க்கின்றன சட்டப் பிரச்சினைகள்!

எறும்புப் புற்றில் கைவிட்ட கதையாகிவிட்டது மாநில அரசியல் நிலைமை!

நம்நாடு செய்தி நோக்கு

"இந்திய அரசியல்—சனநாயக—சட்டத்துறை வரலாறுகளில் வங்கத்தின் நிலைமை, உச்ச கட்டக் குழப்பத்தைக் கொடுத்துவிட்டதோ" என அஞ்சத்தக்க வகையில், நேற்று மட்டும் அடுத்தடுத்து நடந்துள்ள மூன்று நிகழ்ச்சிகள், துணைக் கண்டத்தின் முழுக் கவனத்தையும் கவர்ந்துள்ளன!

★ 'பி. சி. கோஷ் அமைச்சரவை, சட்ட விரோதமானது' என்ற சட்டமன்றத் தலைவரின் தீர்ப்பு—

★ பி. சி. கோஷ் அமைச்சரவை மீதான நம்பிக்கைத் தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்திருக்கும் மேலவைத் தலைவரின் செயல்—

★ மேற்கு வங்கச் சட்டமன்றக் கூட்டத் தொடரையே கலைத்திருக்கும் கவர்னரது உத்தரவு—

ஆகிய மூன்றும், சட்டப் பிரச்சினைகள் பலவற்றை எழுப்பிவிட்டிருக்கின்றன!

"சட்டமன்றத் தலைவர்—அமைச்சரவையினர்—கவர்னர்—ஆகிய மூன்று தரப்பினருக்குமுள்ள 'உறவு, அதிகாரம்' ஆகியவைகளைப் பற்றிப் புதிதாகச் சிந்திக்கவேண்டிய கட்டம் பிறந்திருக்கிறது" என, புதுடில்லியிலுள்ள அரசியல் வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிகிறது.

"கவர்னரால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை செல்லாது என்று கூற சட்டமன்றத் தலைவருக்கு உரிமை இருக்கிறதா? அந்த உரிமையின் அடிப்படையில் அவர், சட்டமன்றத்தினை ஒத்திவைக்க முடியுமா?"

என்பதுபற்றி, மத்திய அரசின் சட்டத் துறை பரிசீலனை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது!

இந்த இரண்டு கேள்விகளுக்கும் கிடைக்கும் விளக்கத்தைப் பொறுத்துத்தான், 'வங்காளம்பற்றிய அடுத்த திருப்பங்கள் அமையும்' என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"சட்ட முறைமைகள் வங்காளத்தில் சீரழிந்துவிட்டன" என்ற கவர்னரின் அறிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுவிட்டால், அந்த மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சிதான் பிரகடனமாகும்; அடுத்து, இடைக்காலத் தேர்தல்தான் வரும் என்பதில் எவருக்கும் ஐயமிருப்பதாகத் தெரியவில்லை!

"சட்டமன்றத்தில் கூச்சல்—குழப்பம்—உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பற்றதன்மை—பி. சி. கோஷ் தாக்கப்பட்டிருப்பது—தெருக்களில் அமளி, ஆரவாரம்—ஆகிய அனைத்தையும் பின்னுக்குத் தள்ளும் வகையில் வங்காளத்துத் திருப்பங்கள், சட்டத் துறைப் பிரச்சினைகள் பலவற்றைத் தோற்றுவித்திருக்கின்றன" என, அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்!

நம்நாடு
ஆசிரியர் : இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1998 கார்த்திகை 14 (30—11—67) வியாழன்

இந்தி பேசாதோர் ஏற்பரா?

இந்திய அரசியல் சட்டத்தில், 'இந்தி மொழி மட்டுமே இந்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழியாகும்' என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசியல் சட்டம் செயலாற்றப்பட்ட பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர், 'இந்தி மட்டுமே ஆட்சிமொழியாகச் செயலாற்றப்பட வேண்டும்' என்பதும், அரசியல் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

ஆட்சிமொழியாகப் பயன்படுவதில் இந்தி மொழிக்குள்ள பற்றுக்குறையைக் கருத்தில் கொண்டு, 'பதினைந்தாண்டுகளுக்குப் பின்னரும் ஆங்கிலத்தைக் குறிப்பிட்ட பணிகளுக்காக இந்திய அரசாங்கம் பயன்படுத்திவரலாம்' என்றும் அதே அரசியல் சட்டம் வகை செய்திருக்கிறது.

'இந்திய அரசாங்கத்தின் ஆட்சிமொழியாக இந்தி மட்டுமே ஆக்கப்பட்டுவிட்டால், தங்களுடைய மொழி நலனும் மற்ற நலன்களும் பாதகமடைந்துவிடும் என்பதை, இந்தி பேசாத பகுதி மக்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டனர்.

'ஆட்சிமொழியாக இந்தி மொழி ஆக்கப்பட்டுவிட்டால், இந்திய அரசாங்கத்தில், இந்தியை முழு அளவில் பேசும் மக்களே ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்பட்டுவிடும்' என, இந்தி பேசாத பகுதி மக்கள் அச்சம் கொண்டனர்.

ஆட்சிமொழியாக்கப்படுவதால், தங்களுக்கு ஏற்படக்கூடிய பேராபத்தைத் தவிர்க்க, இந்தி பேசாத பகுதி மக்கள் கங்கணம் கட்டிக்கொண்டனர்.

ஆட்சி மொழி இந்திக்கு எதிர்ப்புக் கிளம்பியது.

இந்தியை ஆதரித்து, இந்தி மொழியினர் பேசிய பேச்சும், எதிர்ப்பாளர்களைத் தூற்றிய தூற்றலும், இந்தி மொழிமீது ஏற்பட்ட அச்சத்தையும் எதிர்ப்பையும் கூடுதலாக்கின.

ஆட்சி மொழி இந்திக்கு எதிராக மூண்டெழுந்த இவ்வெதிர்ப்பின் கூர்முனையாக, தமிழகத்தில் முன்னேற்றக் கழகம் இருந்தது—இப்பொழுதும் இருக்கிறது.

இந்த நிலையில் இந்தியை ஆட்சி மொழியாகச் செயல்படுத்த வேண்டிய கெடுவும் வந்தது.

அந்தக் கட்டத்தில், 'ஆட்சி மொழிச் சட்டம்' என்ற பெயரால் ஒரு சட்டம், அன்று தலைமை அமைச்சராக இருந்த நேரு அவர்களால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது,

அந்தச் சட்டத்தில், 'இந்தி மொழி மட்டும்தான் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாகும்' என உறுதி செய்யப்பட்டதுடன், 'குறிப்பிட்ட பணிகளுக்கு ஆங்கில மொழியையும் பயன்படுத்திவரலாம்' எனக் கொள்ளப்பட்டது.

ஆனால், "ஆங்கில மொழியைப் பயன்படுத்த வேண்டும் எனக் கட்டாயப்படுத்தக்கூடிய வகையில், 'ஷெல்' என்ற கட்டளைச் சொல்லை, அந்த ஆட்சி மொழிச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்" என, நாடாளுமன்றத்தில் கோரப்பட்டது. இந்தி பேசாத பகுதி மக்கள் சார்பிலும், அக்கோரிக்கை கிளம்பியது.

ஆனால் காலஞ்சென்ற பண்டித நேரு அவர்களே, மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற 'மே' என்ற அனுமதிச் சொல்லுக்கும், கட்டளைச் சொல்லான 'ஷெல்' என்ற சொல்லுக்கும் பொருள் ஒன்றுதான்—என வாதிட்டார். அந்த வாதத்தைக் கேட்டிருந்தவர்கள், 'மே' என்ற சொல்லுக்கும் 'ஷெல்' என்ற சொல்லுக்கும் பொருள் ஒன்றுதான் என்றால், சட்டத்தில் 'மே' என்ற சொல் சேர்க்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக, 'ஷெல்' என்ற சொல்லை இணைத்துக்கொள்ளலாமே—எனப் பண்டித நேரு அவர்களைக் கேட்டனர்.

இப்படிக் கேட்டது, நாடாளுமன்ற நிகழ்ச்சிகளில் பதிவானதுதான் மிச்சமாயிற்று; அந்த நியாயமான கோரிக்கையை நேரு ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆட்சிமொழிச் சட்டம் நடைமுறைக்கு வரவேண்டிய காலம் நெருங்குகின்றபொழுது, அச்சட்டத்துக்கு எதிர்ப்புக் குரல், இந்தி பேசாத பகுதிகளிலிருந்து கிளம்பியது.

அவ்வெதிர்ப்புக் குரலில், தமிழகத்தின் குரல் பெரும் முழக்கமாக அமைந்தது. அந்த எதிர்ப்பு முழக்கத்தில், முன்னேற்றக் கழகத்தின் முழக்கமே ஓங்கி இருந்தது.

இதைக் கண்ட நேரு அவர்கள், 'இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்றவரையில், ஆங்கிலமும் இணை ஆட்சிமொழியாக இருந்துவரும்' என்ற வாக்குறுதியை மறுமுறையும் உறுதி செய்தார்.

ஆனால், தாம் தந்த வாக்குறுதிக்குச் சட்ட உருவம் கொடுக்காமலே, பண்டித நேரு அவர்கள் காலம் கழித்துவந்தார்.

அவருடைய மறைவுக்குப் பின்னர், தலைமை அமைச்சராக வந்த லால்பகதூர் சாஸ்திரியும், நேரு தந்த வாக்குறுதியை திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே வந்தார்.

அவர் மறைவுக்குப்பின், இப்பொழுது தலைமை அமைச்சுப் பொறுப்பேற்றுள்ள இந்திரா காந்தியும், தாம் ஏற்கனவே அறிவித்தபடி, இந்தி பேசாத பகுதி மக்களுக்கு நேரு தந்த வாக்குறுதிக்கான சட்டத்தை உடனடியாக நிறைவேற்றி வைக்காமல் காலதாமதம் செய்தார்.

இனியும் காலம் தாழ்த்தமுடியாது என்பதை உணர்ந்து கொண்ட தலைமை அமைச்சர், ஏற்கனவே 1963-ம் ஆண்டு மே திங்களில் சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்ற மொழிச் சட்டத்தைத் திருத்தும் மசோதா ஒன்றை, நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தார்.

'ஷெல்' வந்தது— 'மே' போகவில்லை!

இந்திய அரசியல் சட்டத்தின் 343 (2)-வது பிரிவுக்குத் திருத்தம் தருவதுதான், நாட்டின் மொழிப் பிரச்சினைக்கு—குறிப்பாக இந்தி பேசாத பகுதியினருக்கு நிரந்தரத் தீர்வு தருவதாக இருக்கும் என்ற நீண்டகாலக் கோரிக்கை அப்படியே இருக்கும்போது, மத்திய அரசு, பெருத்த சிரமங்களுக்கிடையில், 1963-ம் ஆண்டில் வந்த ஆட்சி மொழிச் சட்டத்தின் 3-வது பிரிவுக்கு, திருத்த மசோதா ஒன்றினை மக்களவையில் அறிமுகப்படுத்தி இருக்கிறது.

எனவே, இத்துடன் மொழிப் பிரச்சினை முற்றுப் பெற்று விடவில்லை. சரியாகக் கூறுவதென்றால், 1963-ம் ஆண்டு சட்டத்திலுள்ள சில சந்தேகத்தினைப் போக்கும் வகையில், காலஞ்சென்ற இரண்டு தலைமையமைச்சர்களும் கொடுத்திருந்த உறுதிமொழியினை, சட்ட வடிவமாக்கும் ஓர் ஏற்பாடுதான் இது!

இந்தி மொழி பேசாத மக்களையே—அதாவது, மொழிக் கொள்கையால் பாதிக்கப்பட்டவர்களையே பெரிதும் தொடர்புபடுத்தியிருக்கும் இப்பிரச்சினையில், இந்தி மொழி பேசுவோருக்கும் அனுதாபம் காட்டப்பட்டிருக்கிறது—அனுசரணை கிடைத்திருக்கிறது!

"இந்திய அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள காலவரையறையான 1965 சனவரி 26-க்குப் பின்னரும் அதுநாள்வரை பயன்படுத்தப்பட்டு வந்ததைப்போல் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கலாம் என்ற 1963-ம் ஆண்டின் சட்டத்திலுள்ள 'மே' (May) என்ற ஆங்கில வார்த்தைக்குப் பதில், 'ஷெல்' (Shall) என்ற உறுதிப்பாடான சொல் இருக்கவேண்டும்" என்ற கோரிக்கை, இப்போது வந்துள்ள திருத்த மசோதாவில் நிறைவேறியிருக்கிறது—ஆனால், மற்றொரு குறைபாட்டுடன்!

எப்பொழுதும் அழுக்கடைந்த பூட்சு உறைகளையே அணிந்துவரும் மத்திய அமைச்சர் ஒருவரை நேரு மிகவும் கடிந்துகொண்டு, "இனி அன்றாடம் 'சாக்ஸ்'களை மாற்றிப் போட்டு பழகிக்கொள்ளுங்கள்" எனக் கட்டளையிட்டாராம்—உரிமையுடன்!

மறுநாளும் அந்த அமைச்சரிடமிருந்து துர்நாற்றம் வீசுவதைக் கண்டு முகம் சுளித்த நேரு, 'இன்னும் என்ன—ஒரு மாதிரி வாடை?' என்று கேட்டபோது, அந்த அமைச்சர் சொன்ன பதில் இது:—

"'சாக்ஸ்'களைப் புதியவையாக மாற்றிவிட்டேன்; ஆனால், பழைய 'சாக்ஸ்'களைப் பையில்தான் வைத்திருக்கிறேன்!"

அதுபோல், இந்தி பேசாதோர் விரும்பிய 'ஷெல்' என்ற வார்த்தை கிடைத்திருக்கிறது!

ஆங்கிலத்தை வெறுக்கும் இந்திக்காரர்களுக்கு, அந்த 'மே' போயிருக்கிறது!

'இந்தி பேசாத மாநிலத்துக்கும்—மத்திய அரசுக்கும் இடையேயுள்ள தொடர்புகளில் ஆங்கிலம் கட்டாயமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்' என்றும், 'இரு மாநிலங்களுக்கிடையே உள்ள தொடர்புகளில் ஏதாவது ஒரு மாநிலம் இந்தியை ஏற்காத நிலையில் இருந்தால்கூட, ஆங்கிலத்தையும் அவசியம் பயன்படுத்த வேண்டும்' என்றும் கூறுகிற தற்போதைய திருத்தம்,

"இந்தி பேசும் மாநிலம் விரும்பினால் மத்திய அரசுடன் இந்தியில் மட்டுமே தொடர்புகொள்ளலாம்; அதேபோல், இந்தி பேசும் மாநிலத்துடனும் இந்தியில் மட்டும் தொடர்பு கொள்ளலாம் (ஆங்கிலத்திலும் இருக்க வேண்டிய கட்டாயமில்லை)"

என்ற விருப்பத்தினையும் புதிதாகக் கொண்டிருக்கிறது!

இந்தி பேசாத மாநிலங்களுக்கென கேட்கப்பட்ட ஆங்கில நீடிப்புக்கான உத்தரவாதத்துடன், இந்தி பேசும் மாநிலங்களுக்கு ஆங்கிலத்தை அகற்றிக்கொள்ளும் உரிமையும் தரப்பட்டிருக்கிறது!

இதனைத்தான் இராஜாஜி அவர்கள், "வர இருக்கிற திருத்தச் சட்டம், இந்தியாவை, 'ஆங்கில இந்தியா'வாகவும், 'இந்தி இந்தியா'வாகவும் கூறு போடும்" என்று விமர்சித்துள்ளார்!

தொடர்பு—ஒற்றுமை ஆகிய இரண்டினையும் கருதித்தான் ஆங்கில நீடிப்புக்கான சட்ட வடிவம் கோரப்பட்டதே தவிர, இந்தி வெறியர்கள் கருதி—பேசி வருவதுபோல், ஆங்கிலத்தை அவர்கள் மீது திணிக்கும் நோக்கத்துடன் அல்ல!

ஆனால், 'இந்தி பேசாத மக்களுக்கு நாட்டின் ஒற்றுமை—தொடர்பு—உரிமை கருதி அளிக்கப்படுகின்ற உத்தரவாதத்துடன், இந்தி பேசுபவர்களுக்கும் சேர்த்து இன்னும் சில சலுகைகள் காட்டப்பட்டால்தான், மசோதா சட்ட வடிவம் பெறும்' என்ற இக்கட்டான நிலையில் இருக்கிறது மத்திய அரசு!

எதிரெதிர் நோக்கம் கொண்டவர்களுக்கிடையே உருவாக்கப்படும் ஒரு சமாதான முறையாகவே கருதிப் புதுடில்லி செயல்பட்டிருக்கிறதே தவிர,

- ★ மொழிக் கொள்கை மேலும் வலிவற்றதாக ஆகி இருப்பதனையோ—
- ★ இந்தி பேசுவோர்—பேசாதோர் ஆகியோருக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வு மேலும் விரிவடைவதனையோ கருத்தில் கொண்டு நீண்ட கால பரிகாரத்தில் செயல்பட்டிருப்பதாகத் தெரியவில்லை!

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

இந்த ஆட்சி மொழித் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டுவர, உள்துறை அமைச்சர் சவாண், நாடாளுமன்றத்தின் அனுமதியைக் கோரினார்.

நாடாளுமன்றம், ஆட்சி மொழித் திருத்த மசோதாவுக்கு, சவாண் கோரிய அனுமதியைக் கொடுத்துவிட்டிருக்கிறது.

இந்தத் திருத்த மசோதாவில், காலஞ்சென்ற நேருவும், லால் பகதூர் சாஸ்திரியும் கொடுத்த வாக்குறுதி குறிக்கப்பட்டிருந்தாலும், 'அவர்கள் தந்த வாக்குறுதியில் இடம் பெற்றிருக்கக்கூடிய 'உணர்வு' முழு அளவில் இடம் பெற்றிருக்கிறது' எனக் கொள்ளுவதற்கில்லை.

இந்தத் திருத்த மசோதாவில், 'அனுமதி'ச் சொல்லும், 'கட்டளை'ச் சொல்லுமான 'மே'வும், 'ஷெல்'லும் இடம் பெற்றுள்ளன.

"இந்தி ஆதரவாளர்களையும் இந்தி பேசாதவர்களையும், ஒரே காலத்தில் திருப்தி செய்யவேண்டும் என்ற கருத்தில், இத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது" என்றுதான் சொல்ல வேண்டும்.

இம்மசோதா எந்தக் கருத்தில் கொண்டுவரப்பட்டிருந்தாலும், இத்திருத்த மசோதா சட்டமாக்கப்படுவதனால், இந்தி பேசாத பகுதி மக்களின் விருப்பம் முழு அளவில் நிறைவேறப்போவது கிடையாது.

அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றபடி, 'இந்திய மொழிகள் அனைத்தும் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழிகளாகும்' எனச் சட்டமியற்றப்படுவதன் மூலம்தான், இங்குள்ள பல்வேறு மொழியினரும் மனநிறைவு பெறுவர்.

இப்படி ஒரு ஏற்பாடு அரசியல் சட்டத்தில் செய்யப்படுகின்ற வரையில், 'இந்தி மொழியுடன் ஆங்கில மொழியும் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருந்துவர வேண்டும்' என, அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அரசியல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்ற வரையில், இந்தி மொழி ஆதிக்கத்தை, பொதுவாக இந்தி பேசாத பகுதியினர்—அதிலும் குறிப்பாகத் தமிழகத்தினர்—முழுமூச்சாக எதிர்க்கவே செய்வர்!

இவ்வெதிர்ப்பில், முன்னேற்றக் கழகம் என்றென்றும் முன்னணியில் இருந்தே தீரும்!

—கா. க.

கழகத் தொழிற் சங்கச் சாதனை

திருப்பூர் காட்டன் மில் என்ற பஞ்சாலையில் சுமார் 7 ஆண்டுக் காலமாகப் பணியாற்றிவந்த பதிலித் தொழிலாளர்களை, 'நிரந்தரம் செய்யவேண்டும்' என்று தி. ப. தொ. மு. சங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அப்பிரச்சினை 24—11—67 அன்று கோவை தொழிலாளர்துறை அதிகாரி எல். காரி பி.எஸ்சி. முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

15 தொழிலாளர்களை 1-12-67லும், 9 பேர்களை 15—12—67லும் நிரந்தரம் செய்வதாக நிர்வாகத்தினர் சம்மதித்தனர்.

ஒப்பந்தத்தில் தி. ப. தொ. மு. சார்பில் மாவட்டச் செயலாளர் இரா. முருகேசன் கையெழுத்திட்டார்.

ஏற்கனவே 5 பேர்களை நிரந்தரம் செய்துவிட்டனர்.

நட்டஈடு தரப்பட்டது

மேற்படி ஆலையில் சுமார் ஓராண்டாக ஸ்டோர் கணக்கராகப் பணியாற்றிவந்த ஏ. பி. அருணசலம் என்பவரை, நிர்வாகம், வேலையிலிருந்து நீக்கிவிட்டது; அவருக்காகத் தி. ப. தொ. மு. சங்கத்தின் சார்பாக நடவடிக்கை எடுத்து இரண்டு மாதச் சம்பளம் நட்ட ஈடாக வாங்கித் தரப்பட்டது.

சங்கத்தின் சார்பாக செயலாளர் இரா. முருகேசன் கலந்து கொண்டார்.

பாவேந்தரின் கனவு நனவாகிறது!

தமிழகத்தில் தமிழ் ஆட்சி மலர்ந்து வருகிறது

ஆதித்தனார் தமிழாக்கிய சட்டப் பேரவை விதிகள் வெளியீட்டு விழாவில் முதலமைச்சர் அண்ணா பாராட்டுரை

சென்னை, நவ. 29—

" 'ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமாகத் தமிழில் சட்டமன்றச் சொற்களை உருவாக்க இயலும்' என்ற நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது; இவைகளில் சில நல்ல தமிழ்ச் சொற்களாக இல்லாவிடினும்—நடைமுறைக்காக அவை எழுதப்பட்டிருப்பினும், ஆங்கிலத்திற்குப் பொருத்தமான நல்ல தமிழ்ச் சொற்களாகப் படிப்படியாக நாம் மாற்றிக் கொள்ளலாம்.

"எந்தத் தமிழ்ச் சொல்லும் ஆங்கிலத்திலிருந்து புதிதாகச் சொல்லும்போது, புரியாதது போலத்தான் இருக்கும்; ஆனால், பழக்கத்திலே அது சரியாகிவிடும்.

" 'தமிழகத்தில், தமிழ் அறிந்தோர் ஆட்சி வேண்டும்' என்று அன்று பாவேந்தர் கூறினார்; இன்று அந்நிலை, வடிவமெடுத்திருக்கிறது; அதற்கு 'வண்ணம்' படைத்திட இந்நூல் பெரிதும் பயன்படும்'

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழில் சட்டப் பேரவை விதிகள் அடங்கிய நூலை வெளியிட்டுப் பேசுகையில் விளக்கினார்.

சட்டப் பேரவை விதிகள், இது வரையில் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்துவந்தன; இப்போது அவற்றை, சட்டமன்ற அவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார் அவர்கள், தமிழாக்கம் செய்துள்ளார்.

இராஜாஜி மண்டபத்தில் நேற்று மாலை இப்புத்தகத்தின் வெளியீட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமைதாங்கி 'நீண்ட நாட்களாக நிலவிவந்த குறையினைக் களைந்தெறியும் அளவில், சட்டப் பேரவை விதிகளுக்குத் தமிழாக்கம் தந்துள்ள திரு. சி. பா. ஆதித்தனாருக்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது; அவருடைய இந்தச் சீரிய பணிச்குப் பாராட்டுதலையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்' எனக் குறிப்பிட்டார்.

கே. ஏ. மதியழகன்

உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் வரவேற்புரையாற்றுகையில், 'சட்டப் பேரவை விதிகளைத் தமிழாக்கம் செய்து தந்ததன் மூலம் சனநாயகத்திற்கும், பாராளுமன்றப் பணிக்கும் திரு. சி. பா. ஆதித்தனார், அரிய பணி ஆற்றியிருக்கிறார்; அவரை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்' எனக் குறிப்பிட்டார்.

மு. கருணாநிதி

பொதுப் பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில், 'இந்த நாளில் விருந்தும் தந்து—தமிழ் மென்மேலும் வளர மருந்தும் அளிக்கும் வகையில், திரு. சி. பா. ஆதித்தனார், இந்நூலை ஆக்கித் தந்திருக்கிறார்; இது, சட்டமன்ற நடவடிக்கைகளில் புது முயற்சி—கன்னி முயற்சி என்று கூடக் கூறலாம்' எனக் குறிப்பிட்டார்.

விழாவில் மற்றும் கே. விநாயகம் (காங்கிரசு), பீர்முகம்மது (முஸ்லிம் லீக்), சங்கரய்யா (இடது கம்யூனிஸ்டு), டி. எஸ். ஆதிமூலம் (சுதந்தரா) ஆகியோர் பேசினர்.

கல்பாக்கம் அணு மின் நிலையம் கைவிடப்படமாட்டாது

'1970--71-ல் வேலைதுவங்கக் கூடும்' என அமைச்சர் விளக்கம்

சென்னை, நவ. 28—

"கல்பாக்கத்தில் அணு மின்நிலையம் 1970—71-ல் வேலை செய்யத் துவங்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; இத்திட்டம் கைவிடப்படமாட்டாது"

என்று, தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நிலையத்திற்குத் தேவையான பளுவான இயந்திரங்களை ஏற்றிவரத் தகுந்த செம்மையான சாலைகள் அமைக்கப்பட வேண்டியிருக்கிறது என்றும், அதற்கான நிலம் உரிமை செய்யப்படுவதில் பல சிக்கல்கள் ஏற்படுவதாகவும், தேவையான இடங்களை விட்டுக் கொடுக்க விவசாயிகள் மறுப்பதாலும், பலர் வழக்குகள் தொடுத்திருப்பதாலும், அந்த வேலைகளில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் விளக்கமளித்தார்.

சீமைச்சாமி :—"இந்தத் திட்டம் மத்திய அரசினுடையதாகையால், அதில் நியமிக்கப்படும் ஊழியர்களும் மத்திய அரசாலேயே நியமிக்கப்படுவார்கள்; அப்படி நியமிக்கப்படுபவர்களில், நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்கட்கு அதிக வாய்ப்புக் கிடைக்கும்படிச் செய்ய மாநில அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?"

பதில் :—"இப்போது அங்கே கட்டிட வேலைகள்தான் நடந்து வருகின்றன; அவற்றில் முழுக்க முழுக்க செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். பொறியர்களிலேகூட முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள்; எனவே, இந்த மாநிலத்தவருக்கு அதிக வாய்ப்புக் கிடைக்கும் என நம்பலாம்.

"வடக்கே டிராம்பேயில் உள்ள அணு மின்நிலையத்தில் கூட நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் பாதிப்பேர் இருக்கின்றனர்."

பல்லடம் வட்டம் கைத்தறி நெசவாளர் முன்னேற்றச் சங்கம்

1—11—67 அன்று பல்லடம் வட்டக் கைத்தறி நெசவாளர் முன்னேற்றச் சங்கம் அமைக்கப்பட்டது; சங்க நிர்வாகிகள் வருமாறு :—

தலைவர் : நாராயணசாமி; செயலாளர் : எஸ். அழகிரிசாமி துணைச் செயலாளர் : இராமசாமி; பொருளாளர் : பெருமாள்; மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சங்கத்தின் நோக்கங்கள்—செயல் திட்டம்பற்றி, தி. ப. தொ. மு. சங்கச் செயலாளர் இரா. முருகேசன் விளக்கிப் பேசினார்.

வட்டம் முழுவதிலுமிருந்தும் உறுப்பினர்களைச் சேர்த்துத் தருவதென முடிவுசெய்யப்பட்டது.

கடலூரில் கழகக் கூட்டம்

கடலூர், நவ. 28—

கடலூர் வில்வநகர் திரௌபதி அம்மன் கோயில் திடலில், திரு. ஏ. சுப்பிரமணியம் எம்.சி. தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நகர தி. மு. க. செயலாளர் கி. கோவிந்தராசன், கே. எம். வேலு, கி. தண்டபாணி எம்.சி., இரணியன், ஆர். சுந்தரம் ஆகியோர் பேசினர்.

'ஷெல்' வந்தது--'மே' போகவில்லை!

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"எல்லா மாநிலங்களும் விரும்பி ஏற்கும் வரையில் ஆங்கிலம் நீடிக்கப்பட வழிவகை செய்யப்பட்டிருக்கிறது" என்று இந்தி பேசாதோர் மனச்சாந்தி பெறுவதற்கு முன்னரே, அதே வழிவகை, இந்தி பேசுவோரிடையே புதிய குதூகலத்தைத் தோற்றுவித்திருப்பதனையும் பார்க்காமல் இருக்கமுடியவில்லை!

அதற்குச் சான்றாக இதோ ஒன்று :—

"மத்திய அரசில் பணிபுரியும் எந்த ஊழியரும், இந்தி—ஆங்கிலம் ஆகிய இரண்டும் தெரியவில்லை என்ற காரணத்துக்காகப் பாதகநிலை பெறத் தேவையில்லை" என ஆட்சிமொழிச் சட்டம் கூறுகிறது.

இது, இந்தி மொழி பேசாதோருக்குப் பாதுகாப்புதான்; ஆனால் இதே பாதுகாப்பு, இந்தி மொழி பேசுவோருக்கு மேலும் ஒரு வசதியாக—சலுகையாக மாறுகிறதே! 'ஆங்கிலத்துக்கு அடுத்தபடி இந்திதான்' என்ற தகுதி மட்டுமல்ல—'ஆங்கிலம் இல்லாவிட்டாலும் இந்தி மட்டும் இருந்தால் போதும்' என்ற 'இயற்கை வசதி' உள்ளவர்கள், முதல்தரக் குடிமக்களாகிறார்களே—இதற்கு என்ன பரிகாரம் ?

இதுபோன்ற கேள்விகளுடன், இந்தி மொழி பேசும் மக்களவை உறுப்பினர்கள் மேலும் போராடிப் பெற முயற்சித்து வருவதாகக் கூறப்படும்

★ இந்தி மொழி வளர்ச்சி பற்றிய ஆண்டு அறிக்கை—

★ ஆங்கில மொழி பெயர்ப்பு வசதிகளை இந்தி பேசாதவர்களே செய்துகொள்ள வேண்டும்—

என்ற இரண்டு சலுகைகளும் சேர்ந்துவிட்டால், ஆடுகளுக்கு வேலி போட்டாலும், நரிகளுக்கு 'உரிமை' கொடுத்த அவலமாகத்தான் முடியும்!

—எஸ். ஆர்.

நகர பஸ் கட்டண மாறுதலால் பயணிகளுக்கே பயன் கூடியது

சட்டமன்றத்தில் அமைச்சர் விளக்கம்

சென்னை, நவ. 28—

"சென்னை நகரில் ஓடும் தமிழக அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளின் கட்டண விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டு 15—9—67-முதல் செயல்படுத்தப்பட்டிருக்கிறது"

என பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்தார்.

கே. விநாயகம் :—"இப்படி மாற்றியமைக்கப்பட்டதால் அரசுக்கு இலாபமா ? நஷ்டமா ? 22 காசை 20 காசாகவும், 26 காசை 25 காசாகவும் குறைத்ததை மட்டுமே கூறி, கட்டணக் குறைப்புச் செய்திருப்பதாக அரசுத் தரப்பில் கூறப்படுகிறது; 14 காசை 15 காசாகவும், 18 காசை 20 காசாகவும் உயர்த்தியிருப்பதால், ஏழை—நடுத்தரப பயணிகள் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? உயர்த்தியிருப்பதற்குப் பதில் குறைத்திருக்கலாம் அல்லவா ?

அமைச்சர் :—"14 காசு டிக்கெட்டுக்கு 15 காசு கொடுத்தால் பாக்கித் திருப்பித் தரவேண்டிய ஒரு காசுக்காகப் பிரயாணிக்கும்—கண்டக்டருக்குமிடையே தகராறுகள் ஏற்படுவதாகவும், இதை மாற்றியமைக்க வேண்டும் என்றும் தொழிலாளர்கள் தரப்பிலிருந்தும், பொதுமக்கள் தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் வந்ததையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது; 14 காசை 12 காசாகக் குறைத்தால், ஒரு காசுக்கு நடக்கும் தகராறு 3 காசுக்காக நடக்கும் தகராறாக மாறுமே தவிர, தகராறே ஏற்படாமலிருக்க வழியில்லை. 10 காசாகக் குறைத்தால், அதிக நஷ்டம் ஏற்படும்; எனவேதான், 15 காசாக—ஒரு காசு மட்டும் உயர்த்தினோம். மொத்தம் உள்ள 23 நிலைகளில் 3 நிலைகளில் மட்டுமே கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது; மற்ற 20 நிலைகளிலும் குறைக்கப்பட்டிருக்கிறது. 10 காசு கட்டணத்தில் மாற்றம் இல்லை; 14 காசு 15 காசாக உயர்த்தப்பட்டது; 18 காசு 20 காசாக உயர்த்தப்பட்டது; 22 காசு 20 ஆகவும், 29 காசு 25 ஆகவும் குறைக்கப்பட்டது; 30 காசில் மாற்றமில்லை; 34 காசு 35 ஆக உயர்த்தப்பட்டது; 38 காசு 35 ஆகவும், 42 காசு 40 ஆகவும், 54 காசு 50 ஆகவும், 58 காசு 55 ஆகவும், 62 காசு 60 ஆகவும், 66 காசு 65 ஆகவும், 74 காசு 70 ஆகவும், 78 காசு 75 ஆகவும், 82 காசு 80 ஆகவும், 86 காசு 85 ஆகவும், 94 காசு 90 ஆகவும், 98 காசு 95 ஆகவும் குறைக்கப்பட்டன; இதில் இலாபமா நஷ்டமா என்பது கணக்குப் பார்த்துத்தான் சொல்லமுடியும்."

எம். எஸ். மணி :—"திருச்சிக்குச் செல்லும் அரசு பஸ்ஸில் ரூ. 3 கட்டணக் குறைப்புச் செய்ததால் இலாபமா, நஷ்டமா ?"

பதில் :—"அதனால் பிரயாணிகள் அதிகரித்திருக்கின்றனர்."

கேள்வி :— "கன்னியாகுமரியில் ஓடும் அரசு பஸ்களில் கட்டணக் குறைப்புச் செய்யப்படுமா ?"

பதில் :—"அதுபற்றியும் யோசிக்கப்பட்டது; இப்போது அது தேவையில்லை எனக் கைவிடப்பட்டது; பிறகு அது தனியாக யோசிக்கப்படும்."

இலஞ்ச ஊழல்--

பீகார் அரசின் கடும் நடவடிக்கை

பாட்னா, நவ. 30—

பீகார் அரசின் போலீசுத் துறையைச் சீர்படுத்தும் நடவடிக்கைகளை, காங்கிரசு அல்லாத அமைச்சரவை மேற்கொண்டிருக்கிறது.

இலஞ்ச ஊழல்புரியும் போலீசு அதிகாரிகளை 'ஒழித்துக்கட்ட', போலீசு அமைச்சர் இராமானந்த் திவாரி தலைமையில் ஐவர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது; பத்து மாவட்ட போலீசு சூப்பிரண்டெண்டுகளைக் கட்டாயமாக ஓய்வுபெறச் செய்ய முன்பு அக்குழு சிபாரிசு செய்திருந்தது; இப்போது மேலும் 74 போலீசு அதிகாரிகளை ஓய்வு பெறச் செய்ய சிபாரிசு செய்திருக்கிறது.

சனநாயகம் தழைக்க...!

மாணவரிடையே அண்ணா ஆய்வுரை

"சனநாயகம் என்பது ஓர் அமைப்பு மட்டுமல்ல; சனநாயகமென்பது உயிரற்ற பொருளல்ல; சனநாயகத்தின் பயன் குறித்தோ அதன் நற்றிறம் குறித்தோ எவருக்கும் எவ்வித ஐயப்பாடும் இருக்கத் தேவையில்லை; அந்த அமைப்பு எத்தனை சீரியதோ—நற்றிறம் கொண்டதோ—அத்தனை நற்றிறம் கொண்டவனாக அதனைச் செயல்படுத்தும் மனிதனும் இருந்திட வேண்டும்.

"ஐந்தாண்டுகளுக்கொரு முறை வருகிற தேர்தலோ, ஓட்டுச் சாவடிகளோ சனநாயகம் ஆகிவிட முடியாது; அவையெல்லாம் வெறும் அமைப்புதான்; அவை நிலைக்க—தழைக்க சனநாயக உணர்வு நம் உள்ளங்களிலெல்லாம் ஆழப் பதிந்து பண்பட வேண்டும். எங்கு இத்தகைய உணர்வு மங்குகிறதோ—பஞ்சமாயிருக்கிறதோ—அங்கெல்லாம், சனநாயக அமைப்பு சிதைந்து கெடும்!

"நாம், இந்நாட்டின் சனநாயக அமைப்பைக் குறைபாடற்றதாய்—முழு நிறைவை உடையதாய் ஆக்கிட முயன்று வருகிறோம். சனநாயக உணர்வு மங்கிய பாகிஸ்தானில், இராணுவச் சர்வாதிகாரம் தோன்றியது! பர்மா போன்ற நாட்டில், 'கண் முன் வாழும் கடவுள்' எனக் கொண்டாடப்பட்ட ஊ-நூ போன்ற தேசியத் தலைவர்கள் வாழ்ந்தும்கூட, அங்கு சனநாயக மனநிலையும் மன உரமும் மக்களிடம் இல்லாதிருந்ததால், சனநாயகம் தோற்றது! சனநாயக அமைப்பின் அளவுக்கேற்ப உணர்வின் அளவு பெருகவில்லை; அதனால் சனநாயகம் அங்கே வீழ்ந்தது!

"இதே நிலையைத்தான், வலிமை மிகுந்த சுகர்ணோவின் இந்தோனேஷியாவிலே பார்க்கிறோம்! அந்த நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட சுகர்ணோ, இன்றைய ஆட்சியாளர்களால் சற்றுத் தள்ளி இருக்கும்படிச் செய்யப்பட்டுள்ளார்!

"இங்கு சனநாயகம், நல்ல பாதுகாப்புடனே இருப்பதாக நாம் கருதிக்கொண்டு இருந்துவிடலாகாது; சனநாயகம் அத்தனை பாதுகாப்பான நிலையில் இல்லை; எனவே, சனநாயகம் தழைத்தோங்கிட நம் ஒவ்வொருவரிடமும் சனநாயக மனநிலை—மன உரம்—மனப்பாங்கு வளரவேண்டும்! எத்தகைய அறைகூவலையும் ஏற்கத்தக்க சனநாயக நல்லுணர்வை நாம் பெறவேண்டும்!

"எனவே, தற்காலிகமாக எழுகின்ற உணர்வுகளை மட்டும் அளவுகோலாகக் கொண்டுவிடக் கூடாது!

"பத்தாயிரம் பேர் கூடி, 'இந்தி ஒழிக' என்று குரலெழுப்பிச் செல்வதாக வைத்துக்கொள்வோம்; அந்த ஒரு நிகழ்ச்சி மட்டும் நம்மை இந்தியினரிடமிருந்து காத்துவிடுமா ? தொடர்ந்து அந்த உணர்வு வளர்க்கப்பட வேண்டும்!

"கருத்துப் பரிமாற்றம், விவாதம், மாற்றார் கருத்தை மதித்தல், நமக்குள்ளே ஒருவருக்கொருவர் மதித்துப் பழகிடுதல்—இவற்றாலேயே நிலையான மன உரம் வளரும்!"

—மாநிலக் கல்லூரியில்

சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

மக்களவையில் ஆட்சிமொழி மசோதா, கடந்த திங்களன்று 'அறிமுக'மாகி இருக்கிறது! இன்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், புதுடில்லிக்குப் போகிறார்!

இடையில்—நேற்று, சுதந்தரா உறுப்பினர் டாக்டர் ஹாண்டே, தமிழகச் சட்டமன்றத்தில் கொண்டுவந்திருக்கும் ஆட்சி மொழி பற்றிய தீர்மானம் ஒன்றும், அதன் மீதான விவாதமும், மொழிப் பிரச்சினையில் மையப் புள்ளியாகத் திகழும் தமிழகம்—அதனை ஆளும் கழகம்—'என்ன கருத்தினை மீண்டும் தருகிறது' என்பதனை, இந்தியத் துணைக்கண்டம் மீண்டும் அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பாகப் பயன்பட்டுள்ளது!

காங்கிரசு—சுதந்தரா—தமிழரசுக் கழகம் ஆகிய மூன்று கட்சிகளைச் சார்ந்தோர் மூன்று வகைக் கொள்கைகளைக் கூறியதனை அடுத்து, அண்ணா அவர்கள், மொழி பற்றிய இங்குள்ள கருத்தினையும் மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள்—

1. ஆங்கிலம் மட்டும்—
2. ஆங்கிலமும் தமிழும்—
3. தமிழ் மட்டும்!

மூன்றும் கட்டமான—'தமிழ் மட்டும்'
என்ற நிலையில்தான்,

"இது உடனடியாக—இன்றே—இப்போதே"
என்று ஒரு சாராரும்,

"'தமிழ் மட்டுமே' என்றால், ஆங்கிலம் அகன்று விடும்; அந்த இடத்தில் இந்தி வந்து விடும்"

என்று ஒரு சாராரும் கருதுவதனையும் ஹாண்டேயும், சிவஞானமும் பிரதிபலித்திருக்கின்றனர்.

'தமிழ் மட்டும்' என்ற நிலைக்குத் தாய்மொழியில் முழு வளர்ச்சி பெற ஜப்பான் 100 ஆண்டுகள் எடுத்துக்கொண்டதனைச் சுட்டிக்காட்டி, 'அதே போல் இங்கும் அந்த மாற்றம் படிப்படியாக அமைவதுதான் நல்லது' என்று ஏற்கனவே கல்வியமைச்சர் தந்துள்ள ஒரு விளக்கத்தைக் குறிப்பிட்டுக் காட்டிய கழக உறுப்பினர் கா. வேழவேந்தன், ஹாண்டேயின் தீர்மானத்தின்மீது திருத்தத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்தார்!

"'நாட்டின் இணைப்பு மொழி' என்ற நிலை—திறமை ஆங்கிலத்துக்குத்தான் பொருந்தி வரும்" என்ற உண்மையையும் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பதோடு, 'இந்திதான் இணைப்பு மொழி—தேசிய மொழி' எனக் கருதும் காங்கிரசுக்காரர்களுக்கு, கானடாவின் உதாரணத்தையும் கால மறிந்து சொல்லியிருக்கிறார்!

மொழித் துறையில் பாதிக்கப்பட்டவர்கள் கானடாவில் பிரிவினையே கேட்கும் நிலைக்குத் துரத்தப்பட்டிருப்பதனைச் சுட்டிக்காட்டி, 'இந்தியாவின் மொழிப் பிரச்சினைக்கும் அரசியல் சட்டத்திலேயே திருத்தம் செய்வதுதான் முடிவான வழி' என்று அண்ணா அவர்கள் அறிவித்திருப்பது, மொழி மசோதாபற்றி விவாதிக்க இருக்கும் மக்களவைக்குத் தகுந்த முன்னெச்சரிக்கையாக அமையும்!

சம்பந்த முதலியாரின் 'சபாபதி'யை அண்ணா அவர்கள் இடையில் எடுத்துக்காட்டியிருப்பது, மொழி மசோதாவைக் கொண்டுவந்தவர்களைக் 'கேலி' செய்யும் போக்கில் மட்டுமல்ல;—

"கதையில் வரும் 'சபாபதி' அப்பாவி; ஆனால், இந்தியும் ஆங்கிலமும் எப்படி ஆட்சிமொழியாக இருக்கும் என்று எழுதிய இவர்கள் அப்பாவிகள் அல்லர்—அழுத்தக்காரர்கள்"

என்று வடக்கே உள்ளவர்களின் மனப்போக்கைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்!

இங்கே உள்ள நமது காங்கிரசுக்காரர்களுக்கு, முக்கியமாக இந்தப் படப்பிடிப்பு பயன்படக் கூடியது!

"காலப் போக்கில் ஏற்றுக்கொள்வார்கள்; எனவே, மெதுவாக—மறைவாகத் திணிப்போம்" எனக் கூறும் ஒருவகையான இந்திக்காரர்கள் இருக்கிறார்கள்; சேத் கோவிந்த தாசுகளைவிட, ஆபத்தானவர்கள் இத்தகையவர்கள்!

அத்தகைய—'காலப் போக்கில்' என்ற தத்துவமும், 'இந்திக்கு இங்கே இடம் தேடித் தந்துவிட முடியாது' என்பதனை,

"நெடுங்காலமானாலும், இந்தி இங்கே புகுந்துவிடாது; நாங்கள் அவ்வளவு நெடுந்தூரத்தில் இல்லை; இங்கே (ஆட்சியில்) இருந்தாலும்—அந்தப் பக்கம் (எதிர்க் கட்சியாக) இருந்தாலும்—இந்தி புகும்போது நெடுந்தூக்கத்தில் மக்களை இருக்க விடமாட்டோம்; அவர்களைத் தட்டி எழுப்பிக்கொண்டே இருப்போம்"

என்று முதலமைச்சர் அவர்கள், பாதுகாப்பும்—எச்சரிக்கையுமாகத் தந்திருப்பது, அவரது உரைக்கே முத்தாய்ப்பு பெறும் பகுதியாகும்!

'தலைமைச் செயலகத்தில் நுழைவதற்கு அனுமதிச் சீட்டு' தரும் யோசனையில், 'சனநாயகம், உரிமை' ஆகிய பெரிய தத்துவங்களை இழுத்துவந்து குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள்—காங்கிரசுக்காரர்கள்!

பாதிக்கப்பட்டுவிட்டதாக அவர்கள் பேசியிருக்கும் 'உரிமை'யைப் பற்றிக்கூட,

"அடுத்த மனிதனின் உரிமை ஆரம்பமாகும் இடத்தில், உனது உரிமை முற்றுப்பெறுகிறது"

என்று ஓர் ஆங்கிலப் பழமொழி இருக்கிறது-

"ஒருவருக்குத் தரப்படும் உரிமை மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது; வசதிகளை முறையாக அனுபவித்துக் கொள்ளவே அனுமதிச் சீட்டு முறை"

என்று அண்ணா அவர்கள் தெரிவித்ததற்குப் பின்னராவது, 'நாங்கள் ஆண்டபோது......' என்று காங்கிரசுக்காரர்கள் பேசாமலிருப்பார்களாக!

★

"கட்டாயப்படுத்தி விற்பனை செய்யப்பட்ட காங்கிரசு ஆட்சிக் காலத்தைவிடக் கதர் விற்பனை, கழக நிர்வாகத்தில்தான் அதிகம்" என்று, உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி கூறியது, உறுப்பினர் விநாயகத்தின் உள்ளத்தைத் துணுக்குறச் செய்திருக்க வேண்டும்; 'பலவீன'த்தைக் காட்டிக்கொள்ளாமலிருக்க,

"கழக அமைச்சர்கள் அனைவரும் கதர் அணிவது எக்காலம்?"

எனக் கேட்டு மனச்சாந்தி பெற முயன்றவரையும் முதலமைச்சர் விட்டுவைக்கவில்லை!

"அடுத்த ஐந்தாண்டுக்காலம் வரையில் விநாயகம் கட்சி மாறாமல் இருக்கிறாரா என்பதைப் பார்த்துவிட்டு, அதன் பிறகு வேண்டுமானால் கதர் உடுத்துகிறோம்"

என்று அண்ணா அவர்கள் பதில் தந்ததுடனாவது விநாயகம் நின்றிருந்தால் பரவாயில்லை; மேலே சென்று தனது 'அடையாளம்' வெளியாவதற்குத் தாமே காரணமாகி இருக்கிறார்!

"முந்திய அனுபவம் பற்றி நான் சந்தேகப்பட்டதற்குக் காரணம், நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் இருந்தபோது நண்பர் விநாயகம், என்னைவிடக் கடுமையாகக் காங்கிரசை எதிர்த்து வந்தார் என்பதால்தான்"

என்று அண்ணா அவர்கள், விநாயகத்தின் பழங்காலத்தைக் காட்ட கேர்ந்ததற்கு விநாயகமே காரணமாகிவிட்டார்!

காங்கிரசில் 'பிறந்தவ'ரல்லர் — காங்கிரசுக்குப் 'போனவர்'—என்பதனை, விநாயகம் மேலும் ஒரு முறை, அவராகவே வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்!

★

"செங்கற்பட்டு மாவட்ட காங்கிரசின் தீர்மானம், மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்குத்தான் எதிர்ப்பே தவிர, மாவட்டத் தலைநகர் 'காஞ்சி'க்கு மாற்றப்படுவதற்கு ஆதரவு அளிப்பதுதான்" என்பதனை—1962-ம் ஆண்டினை நினைவுபடுத்தி—அண்ணா அவர்கள் சொல்லிய பிறகுதான், விநாயகத்துக்குத் தெரியவந்திருக்கிறது!

★

"அளவு முறை விநியோகம் பெறுபவர்கள், அடுத்த வாரம் முதற்கொண்டு சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ. 2-க்குப் பதில் ரூ. 1.75 கொடுத்தால் போதும்" என்ற உணவு அமைச்சரின் 'இனிப்பான' அறிவிப்பும், நேற்றுடன் முடிந்துள்ள சட்டமன்றத்தின் ஐந்து நாள் கூட்டத் தொடரில் கிடைத்திருக்கிறது!

சட்டமன்ற மேலவையில்....!

கீழ் அவையைப்போலவே சட்டமன்ற மேலவையிலும் சீர்திருத்தத் திருமண மசோதா சுவையான பயணத்தைப் பெற்றிருக்கிறது!

கழக ஆட்சியின் இந்த நடைமுறையினால் தங்களது சீர்திருத்தத் திருமணம் சட்டபூர்வமாக்கப்படுவது குறித்து மகிழ்ச்சியடைந்திருக்கும் உறுப்பினர்களில் இரு காங்கிரசுக்காரர்களும் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது!

"'தாலி' பெண்ணுக்கு மட்டும்தானா—ஆணுக்கு இல்லையா" என்ற விவாதத்திலும், மேலவை கலகலப்பான விவாதத்தைக் கொடுத்திருக்கிறது!

இத்தருணத்தில், மணமகனும் தாலி கட்டிக் கொள்ள இசைந்ததாக—தாம் கலந்துகொண்ட திருமண நிகழ்ச்சி ஒன்றினைச் சுட்டிக்காட்டி—சட்ட அமைச்சர் மாதவன், மேலும் சிரிப்பொலிக்குக் காரணமாக இருந்திருக்கிறார்!

கடற்கரையில் சுரங்கப் பாதை அமைக்க

நிதியளிப்பதாகக் கூறிய காங்கிரசு உறுப்பினர்

'விளம்பரம் செய்யும் உரிமை எனக்கு வேண்டும்' என்று நிபந்தனை!

'கைம்மாறு கருதாத உதவியே அன்பளிப்பாகும்' என அமைச்சர் பதில்

சென்னை, நவ. 29—

"சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தின் அருகே ரூ. 4.40 இலட்சம் செலவில் கட்டப்பட்ட சுரங்கப் பாதை, 14—4—67-ல் திறந்துவைக்கப்பட்டது"

என்று சட்டமன்றத்தில் கே. விநாயகம் கேள்விக்குப் பதிலளிக்கையில் பொதுப் பணி அமைச்சர் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

கே. விநாயகம்:—"திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பைக்ராப்ட்ஸ் சாலையில் ஒரு சுரங்கப் பாதை அமைக்கவேண்டும் என்றும் அதற்கான செலவை திரட்டித் தருகிறேன் என்றும் நான் முன்பு ஒரு குறிப்பு அனுப்பியிருந்தேன்; அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?"

அமைச்சர்:—"கனம் உறுப்பினர் அனுப்பிய குறிப்புப்பற்றி எனக்குத் தகவல் இல்லை; ஆனாலும், நகரில் மேலும் நான்கு இடங்களில் பாலம் அமைக்கும் திட்டம் உள்ளது. பூங்கா இரயில் நிலையம் எதிரிலும், மவுண்ட் ரோடில் ஆயிரம்விளக்குப் பகுதியிலும், எழும்பூர் காந்தி-இர்வின் சாலையிலும், மேம்பாலம் அமைக்கப்படும்; பைக்ராப்ட்ஸ் சாலை கடற்கரை சந்திப்பிலும் சாலை அமைக்கப்படும்.

"மாம்பலத்தில் கண்ணம்மா பேட்டையிலும், துரைசாமி ரோடிலும் இரயில் பாதையின் கீழ் சுரங்கப் பாதைகள் அமைக்கும் வேலை நடைபெற்றுவருகிறது.

"கனம் உறுப்பினர் அவர்கள் நிதி சேர்த்துத் தர ஒப்புதல் அளித்திருப்பதால் அதை ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராயிருக்கிறது."

கே. விநாயகம்:—"நான் நிதி திரட்டித் தருவதாகத் தெரிவித்திருந்த குறிப்பில் ஒரு நிபந்தனை கேட்டிருந்தேன்; 'நான் நிதி அளித்தால், அதைக் கொண்டு அமைக்கப்படும் சுரங்கப் பாதையில் மேலே கோபுரம்போல் அமைத்து அதிலும், சுரங்கப் பாதைக்குள்ளேயும், விளம்பரம் செய்யும் உரிமை எனக்கு இருக்கவேண்டும்' என்று கேட்டிருந்தேன்; அந்த உரிமை எனக்கு அளிக்கப்பட்டால், நான் நிதி திரட்டித் தருவேன்." (சிரிப்பு)

அமைச்சர்:—"கைம்மாறு கருதாது கொடுக்கப்படும் நிதிக்குத்தான் நன்கொடை—அன்பளிப்பு என்று பெயர்." (அவையில் மேலும் சிரிப்பு)

மாயூரம் தொகுதி மக்கள் குறைகள்

நேரில் கேட்டறிய சட்டமன்ற உறுப்பினர் சுற்றுப்பயணம்

"1—12—67 முதல் 4—12—67 வரை மாயூரம் தொகுதியில் கீழ்க்காணும் ஊராட்சிகளுக்கு, குறிப்பிட்டுள்ள நேரத்தில் வருகிறேன்; என்னுடன் மாயூரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் வி. கோவிந்தசாமி (சேர்வை) அவர்களும் வருகை தர இசைந்துள்ளார்; அன்புகூர்ந்து அந்தந்தப் பகுதியினைச் சேர்ந்த பொதுமக்களும், கழகத் தோழர்களும் தங்களது குறைகள் அடங்கிய மகசர்களை எங்களிடம் நேரில் சேர்ப்பிக்க வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்"

என, மாயூரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என். கிட்டப்பா அறிவிக்கிறார்.

1—12—67 காலை 8 மணி: மாப்படுகை; 8-45: சோழம்பேட்டை; 6-30: மகாராசபுரம்; 10-30: அருமொழிதேவன்; 11-30: பாண்டூர்; பிற்பகல் 12-30: பொன்னூர்; 2 மணி: திருமங்கலம்; 3-15: முருகமங்கலம்; மாலை 5 மணி: ஐவநல்லூர்; 6 மணி: காளி; 6-45: நமசிவாயபுரம்; இரவு 7-45: பூதங்குடி; 8-45: கேசிங்கன்; 9-30: ஆத்தூர்.

2—12—67 காலை 9 மணி: திருச்சித்தம்பலம்; 10 மணி: கடலங்குடி; 11-30: முடிகண்டநல்லூர்; பிற்பகல் 12-45: மணல்மேடு; 2 மணி: கிழாய்; 3-15: சித்தமல்லி; மாலை 4-15: குறிச்சி; 5 மணி: கடுவங்குடி; 6-15: கடக்கம்; இரவு 7-15: வரதம்பட்டு; 8-15: பட்டவர்த்தி; 9-15: சேத்தூர்; 10-15: வில்லியநல்லூர்.

3—12—67 காலை 9-மணி: இளந்தோப்பு; 10 மணி: தலைஞாயிறு: 11-15: மேலாநல்லூர்: பிற்பகல் 12-30: கொருக்கை; 1 மணி: தாழஞ்சேரி; 2-30: நீடூர்; 3-15: கங்கணம்புத்தூர்; மாலை 4-15: அருவாப்பாடி; 5 மணி: ஆனைதாண்டவபுரம்: 6 மணி: மேலமருதாந்தநல்லூர்; இரவு 7-15: மொழையூர்; 8-15: தருமதானபுரம்; 9-15: உளுத்தக்குப்பை.

4—12—67 காலை 9 மணி: வள்ளலாலகரம்; 9-45: மணக்குடி; 10-45: மன்னம்பந்தல்; 11-30: குளிச்சாரி; 12 மணி: நல்லத்துக்குடி; பிற்பகல் 2 மணி: கோடச்குடி; 3-30: மாயூரம் ரூரல்; மாலை 4-15: பட்டமங்கலம்; 5 மணி: அகறக்கீரங்குடி; 6-30: மறையூர்; இரவு 7-30: சித்தக்காடு; 8-15: மூவலூர்; 9 மணி: ஆனைமேலகரம்; 9-45: திருஇந்தளூர்.

நடக்க இருப்பவை

1--12--67

சத்தியமமங்கலம்

வடக்குப்பேட்டை எம் ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு தண்டுமாரியம்மன்கோயில் திடலில்; தலைவர்: இரா. மணிச்சாமி; பேசுவோர்: திருவை அண்ணாமலை, ஜி. பி. வெங்கிடு எம்.சி., எஸ். ஜி. கண்ணப்பா, எஸ். கே. சுப்பிரமணியம், இளங்கோலன், மற்றும் பலர்.

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

டிச. 1 காலை 10-மணி: காட்டுமன்னார்கோயில்; 11-மணி: சிதம்பரம்; 12-மணி: மாயூரம்; மாலை 4-மணி: ஆடுதுறை; 5-மணி: குடந்தை; இரவு 7-மணி: தஞ்சாவூர் (மாவட்டக் கலெக்டர், வேளாண்மைத் துறை அதிகாரிகளுடன் சென்று பூச்சிகளினால் பாதிக்கப்பட்ட பயிர்களைப் பார்வையிடுதல்)

டிச 2 காலை 9-மணி: திருப்பெரும்புதூர் சீரணித் துவக்க விழா.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)